
தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக** கொலோசெயர் 3:16



## ஏப்ரல் 2009


மரம் 9
கனி 5

ஆசிரியர்
B. அர்ஜுனன்



## ஆபிரகாம் – Abraham


- தகப்பன் தேராகு - ஆதி11:27
- மனைவி சாராள் - ஆதி17:15
- விசுவாச மார்க்கத்தார்களுக்கு தகப்பனானான் - கலா.3:7
- பிறனுடைய ஒரு சரட்டைகூட இச்சிக்காதவன் - ஆதி14:22
- 99 வயதில் விருத்தசேதனம்பண்ணப்பட்டவன் - ஆதி17:24
- நீதிமான்களுக்காக தூதனோடே பேசியவன் - ஆதி18:23
- ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்பினவன் - அப்7:5
- தேவன் வைத்த பரீட்சையில் வெற்றிகண்டவன் - ஆதி22:2
- தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்தவன் - ஆதி14:20
- தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவர் - மத்1:21




# கிறிஸ்துவின் வசன

## வழங்கும்

## தொலைக்காட்சி நிகழ்ச்சி



தமிழன் *TV* யில் திங்கள் காலை 6.00 - 6.15
இமயம் *TV* யில் செவ்வாய் காலை 6.30 - 6.45
இமயம் *TV* யில் வியாழன் காலை 6.15 - 6.30



### ரேடியோ நிகழ்ச்சி

இலங்கை ஆசிய சேவை **SW25** மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை
**கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்**



"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 9 ஏப்ரல் - 2009 கனி - 5

ஆசிரியருரை

# ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்?

## *How can I, except some man should guide me?*



இந்தக்கேள்வியை ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந்த மந்திரி பிலிப்புவிடம் கேட்டான். இன்றைக்கும் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கிறவர்கள் அதின் கருத்தை புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆகையால் அதை விவரித்துச் சொல்ல ஒரு சுவிசேஷகன் அல்லது ஒரு போதகன் அவசியம். எனக்கு எல்லாம் தெரியும் என்று அநேகர் சொல்லுவார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்பதுவே உண்மை.

ஒரு மனிதனுக்கு விசுவாசம் எப்படிவருகிறது? அது தானாக வந்துவிடுவது இல்லை. அவன் முதலாவது தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படவேண்டும். வேதமும் அவ்வாறே போதிக்கிறது. "விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர்10:17). தேவனுடைய வசனத்தை அவன் கேள்விப்படும்போது அவனுக்குள் விசுவாசம் வருகிறது. அந்த விசுவாசம் அவனை இரட்சிப்புக்கு நேரே வழிநடத்துகிறது. ஒரு மனிதன் தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படவேண்டுமானால், ஒரு போதகனோ அல்லது ஒரு சுவிசேஷகனோ அவனுக்கு தேவனுடைய வசனத்தைப் போதிக்கவேண்டும். அப்பொழுது அவன் தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படுகிறான். ஒருவனுக்கு சொல்லப்படாவிட்டால் அது அவனுக்கு எப்படித்தெரியும். பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? என்று ரோமர் 10:14,15 வசனங்களில் வாசிக்கிறோம். "அலெக்சந்திரியா பட்டணத்தில்

பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசுபட்டணத்துக்கு வந்தான் அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தான். அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" என்று அப்போஸ்தலர் 18:24-26 முடிய உள்ள வசனங்களில் படிக்கிறோம். இந்த அப்பொல்லோவுக்கு, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் விவரித்துக் காண்பிக்காவிட்டால் அதைப் பற்றி அவனுக்கு எப்படித் தெரியும்? இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே, நீ வேதம் வாசிக்கலாம் அதின் கருத்து இன்னதென்று உமக்குத்தெரியுமா? மந்திரி ஏசாயா புஸ்தகத்தை வாசித்தான் அதின் கருத்து இன்னதென்று அவனுக்குத் தெரியவில்லை. பிலிப்பு அவனுக்கு பிரசங்கித்தான். அதைப்போல அப்பொல்லோ என்பவன் வேதாகமங்களில் வல்லவனாயிருந்தான் ஆனால் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்தான். அவனுக்கு மேலும் தேவனுடைய மார்க்கத்தைக் குறித்து ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் விவரித்துக் காண்பித்து அவனை கர்த்தருடைய உபதேசத்தில் வழிநடத்தினார்கள். ஆக, ஒரு சரியான போதகன் வேதாகமத்தின் சத்தியங்களை எடுத்துச்சொல்லா விட்டால் மற்றவர்களுக்கு எப்படித்தெரியும்?

இயேசு சொல்கிறார்: "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" என்கிறார் (யோவான்15:10). தேவனுடைய சித்தத்தை முழுமையுமாக சிலுவையில் நிறைவேற்றிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தார், இயேசு பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருந்ததுபோல, கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்க உபதேசிக்கப்படுகிறான். அவன் ஏசாயா புஸ்தகத்தை வாசிப்பதினாலோ, அல்லது யோவான் கொடுத்த ஸ்நானத்தைப்போல ஒரு ஸ்நானத்தைப் பெற்றதினாலோ அவன் தேவனுடைய மார்க்கத்தில் இருக்கிறான் என்று அர்த்தமாகிவிடாது. அவன் கிறிஸ்துவையும் அவருடைய கற்பனைகளையும் கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, பாவமன்னிபுக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படுகிறான். இப்படிப்பட்ட ஒருவனே தேவனுடைய மார்க்கத்தில் உள்ளவன். நீங்கள் தேவனுடைய

மார்க்கத்தில் இருக்கிறீர்களா? அல்லது கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டவர்களாக மாத்திரம் இருக்கிறீர்களா? நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார் என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் என எபிரெயர்10:19-ல் படிக்கிறோம்.

ஒரு போதகன் செய்யவேண்டுவதென்ன? இன்றைய நாட்களில் பலர் வேதாகமத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்து கொண்டு தாங்கள் பேசுகிறது இன்னதென்றும் தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது; "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" என்று குறிப்பிடுகிறார் (1பேது4:11). அநேக பிரிவினை சபையார்கள் தங்கள் சொந்தக் கதைகளையும், கற்பனைகளையும் உபதேசங்களாக போதித்து வேதாகமத்தை விட்டு வழி விலகிப்போய்கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய மார்க்கத்தைக் குறித்து போதிக்கிற யாராக இருந்தாலும் வேதவாக்கியங்களின்படி போதிக்க அறிவுறுத்தப்படுகிறோம். நியாயப்பிரமாணத்தின் காலத்தின் கீழ்வாழ்ந்த எஸ்றா "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" எஸ்றா7:10-ல் வாசிக்கிறோம். இன்றைக்கு இந்த எஸ்றாவைப்போல கர்த்தருடைய வேதத்தை ஆராய்ந்து படிக்கிற திருச்சபைகள் எழும்பவேண்டும். இவனைப்போல கர்த்தருடைய கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கிற போதகர்கள் எழும்பவேண்டும். அப்பொழுது சபைகள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்.

முதல் நூற்றாண்டு காலத்தில் "பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷ முழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்" என அப்போஸ்தல நடபடிகள்28:30,31 வசனங்களில் படிக்கிறோம். பவுலுடைய வைராக்கியத்தைப் பார்த்தீர்களா? பலர் சுவிசேஷம் அறிவிக்க கூலி கேட்கிறார்கள். எவ்வளவு சம்பளம் கொடுப்பீர்கள்? சபை, வீடு, வாகனம் கொடுத்து மாதம் எவ்வளவு கொடுப்பீர்கள்? இந்த பவுலுக்கு யார் பணம் கொடுத்தது? தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டில் தங்கிக்கொண்டு தன் சொந்தக்கையாலே உழைத்து, தன்னிடத்தில் வந்தயாருக்கும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப்

பிரசங்கித்திருக்கிறார். இதே காரியத்தை நாமும் செய்யலாம் அல்லவா? ஏன் செய்யக்கூடாது. முதலாவது பவுலுக்கு இருந்த வைராக்கியம் நமக்கு வேண்டும். தான் இலவசமாய்ப் பெற்றக்கொண்ட இரட்சிப்பை மற்றவர்களுக்கு தெரிவிக்க அவர் தயங்கவில்லை, கால தாமதம் செய்யவில்லை உடனே சுவிசேஷத்தை அறிவிக்கும்படி தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து யாவருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். யூதர்கள் மத்தியிலும், புறஜாதிகள் மத்தியிலும் வெட்கப்படாமல் தேவனுடைய வார்த்தைகளை மட்டுமே பிரசங்கித்தார். கட்டுக்கதைகளையும் வம்சவரலாறுகளையும் பின்பற்றி வந்த மக்களுக்கு தேவடைய ராஜ்யத்தையும் இனிவரும் நியாயத்தீர்ப்புகளையும் கர்த்தருடைய வருகையையும் முன்அறிவித்தார். இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே நீ எதைப்போதித்துக்கொண்டிருக்கிறாய்? நீ வேதாகமத்தில் சொல்லப்பட்ட புதிதும் ஜீவனுமான மார்க்கத்தைப் பற்றி பிரசங்கி. இது எல்லோர் மேலும் விழுந்த கடமையாயிருக்கிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது; "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2தீமோ.2:15). தேவனுடைய மனுஷன் உபதேசவிஷயத்தில் ஜாக்கிரதையா யிருந்து கர்த்தருக்கு ஊழியம்செய்யவேண்டும்.

உபதேசத்தைக் கேட்கக்கூடிய நபர் செய்யவேண்டுவதென்ன? இன்றைக்கு கேட்கக்கூடிய நபர் யாருக்கோ எவருக்கோ என்று இல்லாமல் அதைக்குறித்து ஆழ்ந்து தியானிக்கவேண்டியவராயிருக்கின்றனர். மந்திரிக்கு பிலிப்பு பிரசங்கித்தார். அப்பொழுது மந்திரி மிகுந்த கவனத்துடன் அதைக்கேட்டு சுவிசேஷ வசனத்திற்கு தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தான். "இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்" (அப்.8:36). இங்கே பிலிப்பு அவனை ஞானஸ்நானம் எடுக்கச் சொல்லி வற்புறுத்தவில்லை. அவனுடைய வேலை, போதித்தான் அதைக்குறித்து நன்கு யோசித்த மந்திரி கேள்வி கேட்க ஆரம்பித்தான். அவனுடைய விசுவாசத்தை பார்த்த பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசுகிறிஸ்துவை தேவ்டைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச்சொன்னான்; அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான் என்று அப்.8:37,38 வசனங்களில் வாசிக்கிறோம்.


அதைப்போல பேதுருவுடைய பிரசங்கத்தைக் கேட்ட நபர்கள் "இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து; சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும்

பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றான் (அப்.2:37,38). ஆக இந்த இரண்டு ஞானஸ்நான சம்பவங்களிலும் வசனத்தைக் கேட்டவர்கள் சுவிசேஷத்திற்கு தங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். மேலும் ஒரு சம்பவத்தை தியானிக்கலாம். சிறைச்சாலைக்காரனுக்கு பவுலும் சீலாவும் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப்போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப்.16:31-33). தன் குடும்பத்தாரோடு வசனத்தைக்கேட்டு கீழ்ப்படிந்தான். பல குடும்பங்கள் வருடக்கணக்காக வசனத்தை கேட்டு அதைக்குறித்து சிந்திக்காதே போய்விடுகிறார்கள். கர்த்தருடைய வசனம் நமக்கு எதற்கு கொடுக்கப்படுகிறது. உலக அழிவிலிருந்து நம்மை காத்துக்கொள்ளவும், நம்முடைய ஆத்துமா காக்கப்படவும், நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளவும் கொடுக்கப்படுகிறது. கர்த்தருடைய வசனத்தை விசுவாசித்து அதைப் பற்றிக்கொள்ளுங்கள்.

இச்செய்தியில் மந்திரி கேட்ட கேள்வி உங்களுடைய வாழ்க்கைக்கு பிரயோஜனமாக இருந்திருக்குமென்று நம்புகிறோம். நீங்கள் இவ்வளவு காலமாக வேதம் வாசித்துக்கொண்டே வந்திருக்கலாம். ஆனால் அதைக்குறித்து அறியாதவர்களாகவே படித்துக்கொண்டிருப்பீர்கள். வேதம் வாசிக்கும்போது யார், யாருக்கு, எப்பொழுது என்ற கேள்வியோடு படியுங்கள். அப்பொழுது யார் சொன்னது, யாருக்கு சொன்னது, எப்பொழுது சொன்னது என்பதைப் புரிந்துகொள்வீர்கள். புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்கின்ற நமக்கு ஆண்டவர் இயேசுவின் உபதேசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு நாம் சொவிகொடுக்கவேண்டும். அந்த உபதேச சட்டத்தின்படி வாழவேண்டும். அது நம்மை பாவமற கழுவி பரலோகம் கொண்டுசேர்க்கும். இயேசு சொல்கிறார் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவான்14:6). அந்த வழியைப் பற்றிக்கொள்ளுங்கள். முதல் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த அப்போஸ்தலர்கள் அதைக்குறித்து பிரசங்கித்தார்கள். அந்த பிரசங்கத்தைக்கேட்ட 3000பேர், மந்திரி, சிறைச்சாலைக்காரன் ஆகியோர் உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டனர். நீங்களும் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் அங்கமாகுங்கள். காலம் சமீபமாயிருக்கிறது.

# யாரை நோக்கி நாம் ஜெபிக்கவேண்டும்?
# To Whom Should We Pray?

*-J.C.Choate*



நாம் கிறிஸ்தவர்கள், தேவனுடைய பிள்ளைகள், கர்த்தருடைய சபையாகிய அவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்கள், அவருடைய பிரசன்னத்திற்குள் வரக்கூடிய சிலாக்கியம் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். தேவன் நம்மோடு தம்முடைய வார்த்தையின் மூலம் பேசுகிறார், மேலும் நாம் ஜெபத்தின் மூலம் அவரோடு பேசுவதற்குத் தகுதியுடையவர்கள். நாம் அவரை துதிக்கவும், கனப்படுத்தவும் அங்கிகரிக்கப்பட்டவர்கள். அவர் செய்த சகலவற்றிற்காகவும், மேலும் தொடர்ந்து நமக்காகச் செய்கிறவற்றிற்காகவும் நம்முடைய நன்றிகளை செலுத்தக் கூடியவர்கள், மேலும் நம்முடைய விண்ணப்பங்கள் அனைத்தும் ஜெபத்தின் மூலமாக அவருக்குத் தெரிந்திருக்கக்கடவது.

நம்முடைய தேவன் மரித்தவர் அல்ல, ஆனால் அவர் ஜீவிக்கிறவர் மேலும் எப்போதும் நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறவராகவும் நாம் அவருடைய சித்தத்தின்படி ஜெபிப்போமானால் நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறவராகவுமிருக்கிறார் (1யோவா.5:14,15). ஏனென்றால் அவர் நம்மை உருவாக்கினார், நம்மை அவர் அறிகிறார் மேலும் நம்முடைய தேவவைகளை அவர் அறிகிறார். ஆகையால் நாம் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம் (மாற்.16:16; அப்.2:38,47), அவர் நம்முடைய பிதாவாயிருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். அவருடைய குடும்ப அங்கத்தினராயிருக்கின்ற படியினால், அவரோடு கூட நாம் மிகவும் விசேஷித்த உறவினைக் கொண்டிருக்கிறோம். அவர் நம்மை நேசிக்கிறார் நாம் அவரை நேசிக்கிறோம், ஆனபடியினால் அவர் எப்போதும் நம்மைக் குறித்து அக்கறையுடனிருக்கிறார்.மேலும் நாம் ஜெபிக்கும் போது நமக்குச் செவிகொடுத்து நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்க விரும்புகிறார்.

தேவன் என்றென்றும் ஆவியாயிருக்கிறார் (யோவா.4:24). நாம் சந்திரனுக்கு, நட்சத்திரங்களுக்கு, மற்றும் இயற்கைக்கு அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள்களுக்கு, அல்லது மதத்தலைவர்கள் என்ற உருவிலிருக்கிற மனிதருக்கு மற்றும் பரிசுத்த மனிதர்கள் என அழைக்கப்பட்டவர்களுக்குத் தலைகுனியக் கூடாது. இப்பேர்ப்பட்ட பொருட்கள் அல்லது மனிதர்கள் நம்மை இரட்சிக்க முடியாது. மேலும் அவர்கள் நம்முடைய ஜெபங்களுக்குச் செவிசாய்த்து பதிலளிக்க முடியாது.

நாம் ஒரே தேவனும் ஒரே கர்த்தரும் உண்டென்று அறிந்திருக்கிறோம். தேவனுடைய பிள்ளைகளுக்கு பிதாவாக ஒரே தேவனும் அவருடைய குமாரனாகிய

இயேசு ஒரே கர்த்தராகவுமிருக்கிறார் (எபே.4:1-6). ஆனபடியினால் இயேசு தேவனுடைய குமாரனும் ஒரே கர்த்தருமாயிருக்கிறார். அவர் நம்முடைய மத்தியஸ்தர், பரிந்து பேசுகிறவர் மேலும் நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. அவ்வாறாக , இயேசுவின் மூலம் நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திற்குச் செல்லும் வழியைப் பெற்றிருக்கிறோம். ஆனபடியினால் நம்முடைய எல்லா ஜெபங்களும் இயேசுவின் மூலமே தேவனிடத்திற்கு ஏறெடுக்கப் படவேண்டியிருக்கிறது. அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறாக எழுதினான், "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார். அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்" (யோவா.2:1-3). மறுபடியும் எபிரேய எழுத்தாளன், "இவரோ (இயேசுவோ), விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன் படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தரா யிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்" (எபி.8:6) என்றான். இந்த எழுத்தாளன் கிறிஸ்துவே புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார் (எபி.9:15) எனவும், தேவனோடுள்ள நம்முடைய ஐக்கியத்திற்குள் நம்மை வழிநடத்துகிற உடன்படிக்கை இதுவே எனவும் தொடர்ந்து கூறுகிறான்.

யாரை நோக்கி நாம் ஜெபிக்க வேண்டும்? என்ற நம்முடைய ஆரம்ப கேள்விக்குத் திரும்புகையில், கிறிஸ்தவர்கள் பிதாவாகிய தேவனை நோக்கி அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலம் ஜெபிக்கவேண்டு மென்பதே இதனுடைய பதிலாயிருக்கும். மற்ற யாரோ ஒருவரை நோக்கி ஜெபிப்பது பரிகாசத்துக்குரியதாகவும் நேரத்தை வீணடிப்பதாகவுமிருக்கும். கிறிஸ்துவின் மூலம் ஏறெடுக்கப்படாத ஜெபங்கள் கேட்கப்படாதவைகளாயிருக்கும், ஏனென்றால் இயேசு கிறிஸ்துவையல்லாத வேறே மத்தியஸ்தர் நமக்கும் பிதாவுக்குமிடையே இல்லை. நம்முடைய ஜெபங்கள் கேட்கப்பட்டு பதிலளிக்கப்பட நாம் எதிர்பார்ப்போமானால், நாம் கட்டாயம் பிதாவின் சித்தப்படியே ஜெபிக்கவேண்டும்.

**<u>தேவனை நோக்கி ஜெபிக்கும்போது...</u>**

**ஜெபம் நம்மை பெலப்படுத்தும்**
**ஜெபம் நம்மை உறுதிப்படுத்தும்**
**ஜெபம் நம்மை நாளும் வழிநடத்தும்**



## மூன்று விதிகள் = The Rule of Three

மூன்று காரியங்கள் அடக்கவேண்டியவை:
கோபம், நாவு, போக்கு

மூன்று காரியங்கள் விருத்திசெய்யவேண்டியவை:
தைரியம், அன்பு, சாந்தம்

மூன்று காரியங்கள் புகழப்படவேண்டியவை:
சிக்கனம், உழைப்பு, தாமதமின்மை

மூன்று காரியங்கள் வெறுக்கப்பட வேண்டியவை:
கொடூரம், கர்வம், நன்றியறியாமை

மூன்று காரியங்கள் தேவையென விரும்பப்படவேண்டியவை:
ஆரோக்கியம், மனதிருப்தி, நண்பர்கள்

மூன்று காரியங்கள் ரசிக்கப்படவேண்டியவை:
பெருந்தன்மை, புத்திக்கூர்மையான சக்தி, வசீகரமிக்கவை

மூன்று காரியங்கள் கொடுக்கப்பட வேண்டியவை:
தேவையிலிருப்போருக்கு தர்மம்,
கவலையிலிருப்போருக்கு ஆறுதல்,
தகுதியுடையோருக்குப் பாராட்டு

-The Voice of Truth International

**மணமகள் தேவை**

1. 30 வயதுள்ள M.A. படித்த கிறிஸ்துவின் சபை ஊழியருக்கு
தொடர்பு சகோ.பிரான்ஸிஸ்டேவிட்
போதகர், புது டில்லி. 09810763321

2. 30 வயதுள்ள பிளஸ்2 படித்த தனியாரில் பணிபுரியும்
கிறிஸ்துவுக்குள் உள்ள மணமகனுக்கு
தொடர்பு: சகோ.சுந்தர்ராஜ் ஊழியர், வண்ணாரப்பேட்டை, சென்னை 984831688

3. 38 வயது HSC படித்த மஹாராஷ்ட்ரிய கிறிஸ்துவ மணமகனுக்கு
தொடர்பு: ஊழியர் 0986919425/ 022–669665070 / 66

**மணமகன் தேவை**

1. 31 வயதுள்ள பெங்களூரில் செவிலியர் வேலை செய்யும்
பெண்ணுக்கு
தொடர்பு: சகோ.லெஸ்லி லாரன்ஸ் ஊழியர், பெங்களூர். 09986435098

2. 34 வயதுள்ள M.A. படித்த தனியாரில் பணிபுரியும்
தொடர்பு: சகோ.மனுவேல் ஊழியர், தாம்பரம், சென்னை. 9884464924

3. 25 வயதுள்ள B.Com., படித்த தனியாரில் பணிபுரியும்
தொடர்பு: சகோ.செங்கோல்ராயன் ஊழியர், பாண்டிச்சேரி. 9244552382

**மேலும் தொடர்புக்கு: S.David Martin - 98404 25080**

பெண்கள் பகுதி

# யார் வஞ்சகர்?

## Who are Deceivers?

*J. Glory Arjunan*



யார் வஞ்சகர்? பிரியமான சகோதரிகளே, மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள் (2யோவா.7). ஆம், இன்றைய உலகில், இயேசுவே தங்களுடைய இரட்சகர், அவரே தங்கள் பாவங்களிலிருந்து விடுவித்து ஒரு பரிசுத்தமான வாழ்வை அளித்துள்ளவர், அவரே இந்த உலகமும் அதிலுள்ளவைகளும் கொடுக்க முடியாத சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்கிறவர், அவர் ஒருவரே தங்களை உண்டாக்கினவர் என தைரியமாய் அறிக்கை பண்ணாதவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளுகின்றனர். ஆனால் இவர்களைப் பார்த்து வேதம் வஞ்சகர் என்றும் அந்திகிறிஸ்துவுமாயிருக்கிறார்கள் என்றும் கூறுகிறது.

அநேக சகோதரிகள் மிக உற்சாகமாய் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால் காலப்போக்கில் ஆதியில் கொண்டிருந்த அன்பையும், விசுவாசத்தையும் தள்ளிவிட்டு தங்களுடைய கிரியையினாலும், வார்த்தையினாலும் இயேசுவை அறிக்கை பண்ணாமல் மறுதலிக்கின்றனர். காரணம், உலகம் அவர்களை வழிவிலகச் செய்கிறது. ஐயோ, இயேசுவை அறிக்கையிட்டால் அல்லது நாங்கள் கிறிஸ்தவர்கள் எனக் கூறினால் அரசாங்கத்தின் சலுகைகள் பறிபோய்விடுமே, என்னுடைய குழந்தைகளின் பெயர் கிறிஸ்தவ பெயராயிருந்து கிறிஸ்தவர்கள் எனக் கூறுவோமானால் எந்த சலுகையும் பெற முடியாதே என்று எஸ்தர் என வைத்த பெயரை நாகலட்சுமி என மாற்றுகின்றனர். பீட்டர் என்ற பெயரை பெருமாள் என மாற்றுகின்றனர். அன்பு சகோதரியே உங்களுடைய குழந்தைகளின் பெயரை இவ்விதமாய் மாற்றி நிரந்தரமாக நித்திய தேவனிடமிருந்து கிடைக்கும் சலுகையை, ஆசீர்வாதங்களை இழந்து அநித்தியமான கொஞ்சகாலத்திற்கு மட்டுமிருக்கப்போகிற சலுகைக்காக இயேசுவை மறுதலிக்கிறீர்களா? கர்த்தர் உங்களைப் பார்த்து நகைப்பார். "மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்"(மத்.10:33) எனக்கூறுகிற இயேசுவின் தொனி உங்கள் காதுகளில் விழவில்லையா? மோசம் போகாதீர்கள். தேவன் தம்மை பரியாசம் பண்ண வொட்டார். மனந்திரும்பி இயேசுவை அறிக்கைபண்ணுங்கள்.

வேறு சிலர், இயேசுவைத்தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொண்டபோதிலும், திருமணத்திற்காகவோ, வேலை வாய்ப்பிற்காகவோ, வேறுஉலக சம்பத்துக்களுக்காகவோ இயேசுவை மறுதலிக்கின்றனர். அநேகர்

தங்களுக்கு அரசாங்கத்தில் வேலை கிடைக்கவேண்டுமென்பதற்காக தங்களுக்கு சூட்டப்பட்டிருந்த கிறிஸ்தவப் பெயர்களை மாற்றி இன்று பெரிய பெரிய பதவியில் அமர்ந்திருக்கின்றனர். அலுவலகத்தில் கிறிஸ்தவரல்லாதவர், ஆனால் வெளியில் கிறிஸ்தவர்கள் என அழைத்துக்கொள்ளுபவர் அநேகர். இவையெல்லாவற்றிற்கும் இயேசுகிறிஸ்துவே நமக்கு நல் மாதிரியாகயிருக்கிறார். "...பிசாசு அவரை (இயேசுவை) மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்" (மத்.4:8,9). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொண்டவரையே பிசாசு இவ்வாறு சோதித்தான். "அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்"(மத்.4:10). அன்பு சகோதரியே, உலகப்பொருளுக்காக இயேசுவை மறுதலித்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அப்படியென்றால் நீங்கள் இயேசுவை அறிக்கைபண்ணாத வஞ்சகரும் அந்திகிறிஸ்துவுமாயிருக்கிறீர்கள். மனந்திரும்பி இயேசுவை அறிக்கையிடுங்கள்.

இன்னும் அநேக ஸ்திரீகள் தங்களுடைய அன்பை விட்டுவிடுகின்றனர். சதா உலகக்காரியங்களுக்காகக் கவலைப்பட்டு இயேசுவை தங்களுடைய கிரியைகளில் மறுதலிக்கின்றனர். அன்பு சகோதரியே, தவறான நோக்கத்தோடே நீங்கள் இயேசுவை பின்பற்றுவீர்களானால் ஏமாந்து போவீர்கள். இயேசுவை ஏற்றுக்கொண்டால் நமக்கு உலக சம்பத்துகள் அனைத்தும் கிடைத்துவிடும் என லௌகீக இச்சைகளை நிறைவேற்றும்படி பின்பற்றாதீர்கள். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்"(மத்.6:33) என்று வேதம் கூறுகிறது. முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் தேவனுடைய ராஜ்யத்தையும், நீதியையும் தேடுங்கள். உண்மையான வாஞ்சையோடு உங்கள் பாவங்கள் கழுவப்பட இயேசுவே தஞ்சம் என எண்ணுங்கள். இயேசுகிறிஸ்துவின் நீதியையும், பரிசுத்தத்தையும், பாவமன்னிப்பையும் நாடுங்கள். அப்போது உங்களுடைய சரீரத்திற்கு வேண்டிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வீர்கள். இயேசு கிறிஸ்துவை சரியான வழியில் பின்பற்றுங்கள். இயேசுவை உலகத்தார் முன் அறிக்கையிடுங்கள்.

அநேகர் மாயமான, பல தந்திரமான வழிகளைத் தெரிந்தெடுத்து வெளித்தோற்றத்தில் பக்திமான்கள் போல வேஷந்தரித்து மற்றவர்களை தங்களைப்போல மாற்றும்படி விரும்புகின்றனர். இப்பேர்ப்பட்டவர்களைக் குறித்து, "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய்

நரகத்தின் மகனாக்குகிறீர்கள்" (மத்.23:15) என வேதம் கூறுகிறது. இவர்களுக்கும் கிறிஸ்துவின் உபதேசத்திற்கும் சம்பந்தமேயிராது. தாங்களே கிறிஸ்தவர்கள், அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள், தரிசனம் பெற்றவர்கள், என அடிக்கிக் கொண்டே போவார்கள், ஆனால் உங்களுடைய சரீரமாகிய சபைக்குத் தலை யாரென்று கேட்டால் யார் யாரையோ கூறி, தம்முடைய இரத்தத்தையே சிந்தி சம்பாதித்துக் கொண்ட கிறிஸ்துவை மறுதலித்து சபைக்கு ஏதோ ஏதோ பெயர் சொல்லுவார்கள். அன்பு சகோதரிகளே, இவர்களே கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத வஞ்சகர்களும் அந்திக்கிறிஸ்துமாயிருக்கிறார்கள். நீங்களும் இவர்களில் ஒருவராக இருப்பீர்களென்றால், இன்றே மனந்திரும்பி கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். அவரது நாமத்தை அறிக்கையிட்டு மகிமைப்படுத்துங்கள்.

".....மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது" (1யோவா.4:2,3). அன்பு சகோதரிகளே, நீங்கள் தேவ ஆவியைப் பெற்றிருப்பீர்களென்றால், இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணி உங்கள் வார்த்தையினாலும், கிரியையினாலும், அவரை மகிமைப்படுத்துகிறவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவை அறிக்கை பண்ணாமல் மறுதலிப்பீர்களானால், "இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து" 1யோவா.2:22; 2யோவா.7 என்ற வசனங்களுக்கேற்ப வஞ்சகரும் அந்திக்கிறிஸ்துவுமாயிருப்பீர்கள். எனவே மனந்திரும்பி மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுங்கள். அப்பொழுது இயேசு கிறிஸ்து பிதாவின் முன்பாக உங்களை மறுதலியாமல் அறிக்கையிடுவார்.

**ஆசை**


1. யூதர்களுக்கு ஸ்தேவான் மீது கல்லெறிய ஆசை - அப்.7:58
2. ஐத்திகுவுக்கு சபை ஆராதனையில் தூங்க ஆசை - அப்.20:9
3. தெசலோனிக்கே சபையாரை பார்க்க பவுலுக்கு மிகுந்த ஆசை - 1தெச.2:17
4. இளைய குமாரனுக்கு தவிட்டினால் தன் வயிறை நிரப்ப ஆசை - லூக்.15:16
5. ஆபிரகாமுக்கு இயேசுவின் நாளைக் காண ஆசை - யோவா.8:56
6. இயேசுவுக்கு சீஷரோடு பஸ்காவை புசிக்க ஆசை - லூக்.22:15
7. பவுலுக்கு கிறிஸ்துவுடனே கூட இருக்க ஆசை - பிலி.1:23
8. செர்கியுபவுலுக்கு தேவ வசனத்தை கேட்க ஆசை - அப்.13:7
9. லாசருவுக்கு துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசை - லூக்16:21
10. தேமாவுக்கு இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை - 2தீமோ.4:10

உங்களுக்கு எதன் மீது ஆசை?

நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து கொள்ளுங்கள் - எபி.13:15

P.அலிஸ்மேரியம்மாள்

# நாமகரண கூட்டத்தாரின் கொள்கைகளும் வசனத்தை அவர்கள் மறுதலித்தலும் என்ற பாடத்திட்டம்



*Bro. Daniel Durairajan, Preacher*
*Church of Christ, A.K.J.Complex,*
*1st Floor, Marshingpet Main Road,*
*Trichy -1 Mobile No: 99446 16926*

## "புதிய ஏற்பாட்டு சபை"

முன்னுரை:

1.அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டும் 2,054 பிரிவு மதக் கூட்டத்தார் இருக்கிறார்கள்

2. ஏறக்குறைய 5000க்கும் மேற்பட்ட தீர்க்க தரிசன கூட்டங்கள் (Prophet Movements) ஆப்பிரிக்காவில் காணப்படுகிறது.

3. 'புதிய ஏற்பாடு' ஒரே ஒரு சபையைப் பற்றி தான் வெளிப்படுத்துகிறது எபேசி.4:4-6; எபேசி.1:22,23

a) இதை யோசித்துப்பாருங்கள் இப்படியிருந்தால் எப்படியிருக்கும்?

b) இப்படிப்பட்ட ஒரே ஒரு சபையை மீட்டு அமைக்க முடியுமா?

திறனாய்வு:

1. இந்த புதிய ஏற்பாட்டு சபையானது மாதிரியின் படியாக (Pattern) கட்டப்பட்டது.

a) தேவன் நோவாவுக்கு பேழையைப் பற்றின ஒரு மாதிரியை (Pattern) கொடுத்தார் (ஆதி.6:14-16,22).

b) தேவன் மோசேக்கு ஆசாரிப்பு கூடாரத்தைப் பற்றின ஒரு மாதிரியை (Pattern) கொடுத்தார் (யாத்.25:9,40; எபி.8:5).

c) தேவன் தேவாலயத்தைக் கட்ட ஒரு மாதிரியை தந்தார் (1நா.28:11-13).

d) தேவன் தம்முடைய சபையைக் குறித்த மாதிரியையும் கொடுத்துள்ளார்.

அ) உபதேச சட்டம் (Form of Doctrine) ரோம.6:17

ஆ) எல்லா சபைகளிலும் பவுல் இவைகளையே போதித்து வந்தார் (1கொரி.4:17)

இ) என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு (2தீமோ.1:13). (Hold fast the pattern of sound words)

ஈ) இந்த தெய்வீக திட்டமானது "புதிய ஏற்பாடு" யூதா 3, 2 யோவா.9-11

2. இந்த புதிய ஏற்பாட்டு சபையானது. "தீர்க்க தரிசனங்களின்" அடிப்படையில் கட்டப்பட்டது.

அ) பரி. ஆவியானவர் ஊற்றப்படுகிற அந்தக் கடைசி நாட்களில் சபை கட்டப்படும் (யோவேல்2:28-32; அப்.2:1-47).

ஆ) ரோம பேரரசர்களின் நாட்களில் சபை கட்டப்படும் (தானி.2: அப்.2:1-47).

இ) எருசலேமில் கடைசி நாட்களில் சபை கட்டப்படும். எல்லாத் தேசத்தாரும் அதை நோக்கி ஓடிவருவார்கள், சுவிசேஷமானது எருசலேமிலிருந்து பிரசங்கிக்கப்படும் (ஏசா.2:1-4; மீகா.4:1,2; அப்.2:1-47).

**3. இந்த புதிய ஏற்பாட்டு சபையே தேவனுடைய நித்திய திட்டத்தின் ஒரு பகுதியாகும் (எபே.3:8-11).**

**4. இந்த புதிய ஏற்பாடு சபை இயேசு கிறிஸ்துவால் கட்டப்பட்டது அவருடைய இரத்தத்தைக் கொண்டு வாங்கப்பட்டது.**

அ) இயேசு வாக்களித்தார் "நான் என் சபையைக் கட்டுவேன்" (மத்.16:13-20).

ஆ) இயேசுவே அஸ்திபாரமாகவும் தலையான மூலைக்கல்லாகவும் இருக்கிறார் (1கொரி.3:11; எபேசி.2:19-22)

இ) இயேசுவே இந்த சபைக்காக இரத்தம் சிந்தினவர் (அப்.20:28).

**5. இந்த புதிய ஏற்பாட்டு சபைக்கு விசேஷித்த அமைப்பு இருக்கிறது.**

அ) இயேசுவே, தலையாக இருக்கிறார் (எபே.1:22,23; கொலோ.1:18; மத்.28:18).

ஆ) புதிய ஏற்பாடு, தேவனுடைய வார்த்தை, கிறிஸ்துவின் சுவிசேஷம் இதனுடைய ஆளுகைச் சட்டமாகும் (மாற்.16:15; கலா.1:6-9; 2தீமோ.3:16,17; வெளி.22:18,19).

இ) ஒவ்வொரு சபையும் தன்னாட்சியுடையது (அப்.14:23; பிலி.1:1; 1பேது.5:1,2).

ஈ) மூப்பர்கள் பிராந்திய சபைகளை கண்காணிக்க ஏற்படுத்தப்பட்டார்கள் (அப்.14:23).

a) அவர்கள் பிஷப்புகள், கண்காணிகள் என்றும் அழைக்கப்பட்டார்கள் (அப்.20:17,28; தீத்து1:5,7).

b) அவர்கள் மேய்ப்பர்கள், பாஸ்டர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள் (எபே.4:11; 1பேது.5:1-4).

உ) மூப்பர்களுக்கு சில பிரத்யேகமான தகுதியம்சங்கள் இருத்தல் வேண்டும் (1தீமோ.3:1-7; தீத்து1:5-9).

ஊ) உதவிக்காரர்கள் சபையில் பணி செய்பவர்கள் (பிலி.1:1; 1தீமோ.3:8-13).

எ) சுவிசேஷகர், தேவ வார்த்தையை போதிப்பவர், பிரசங்கிகள் (அப்.21:8; எபேசி.4:11; 2தீமோ.4:1-5).

**6. இந்த புதிய ஏற்பாட்டு சபைக்கு விசேஷித்த ஆராதனை ஒழுங்குகள் உண்டு (யோவான்4:24).**

அ) வாரத்தின் முதல் நாளில் அவர்கள் கூடிவந்தார்கள் (அப்.2:1; மத்.28:1; மாற்.16:1,2; லூக்.24:1-3; யோவா.20:1,2;19,26; அப்.20:7; 1கொரி.16:1,2; வெளி.1:10).

ஆ) இந்த புதிய ஏற்பாட்டு சபையினர் கர்த்தருடைய திருவிருந்தினை

சாப்பிடுகிறார்கள் (மத்.26:26-28; அப்.20:7; 1கொரி.11:23-34; அப்.2:42).

இ) இந்த புதிய ஏற்பாட்டு சபையினர் ஆராதனையில் ஜெபம் செய்தனர் (அப்.2:42; 1தீமோ.2:1-8).

ஈ) இந்த புதிய ஏற்பாட்டு சபையினர், தேவனை துதிக்கும்படி பாட்டு பாடினார்கள் (எபே.5:18,19; கொலோ.3:16,17).

உ) இந்த புதிய எற்பாட்டு சபை, தேவனுடைய வார்த்தையை போதிப்பதினால் ஊன்றக் கட்டப்பட்டது (மத்.28:19-20; அப்.20:7; 2தீமோ.4:2-4).

ஊ) இந்த புதிய ஏற்பாட்டு சபை, வாரத்தின் முதல் நாளில் தங்களால் ஆனவற்றை சேமித்து வைத்து கொண்டு வந்து கொடுத்தார்கள் (1கொரி.16:1,2; 2கொரி.8,9-ம்அதிகாரம்).

**7. இந்த புதிய ஏற்பாட்டு சபைக்கு மூன்று முக்கியமான வேலைகள் உண்டு.**

அ) முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தல் (மத்.20:19-20; மாற்.16:15,16; லூக்.24:46,47; 2தீமோ.2:2; கொலோ.1:23).

ஆ) இரட்சிப்புக்குள் வந்தவர்களை ஊன்றக் கட்டுதல் (மத்.28:20; அப்.20:7; எபேசி.4:12; ரோம.1:15; எபி.5:12-14; 2பேது.3:18).

இ) பரிசுத்தவான்கள் அல்லது பாவிகளுக்கு தேவையிலுள்ளவர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதைப்பொறுத்து உதவி செய்வது (அப்.11:27-30; 2கொரி.8,9-ம் அதிகாரம்; கலா.1,2 அதிகாரம்; கலா.6:10; யாக்.1:27).

**8. இந்த புதிய ஏற்பாட்டு சபை ஒன்றுபட்டுள்ளது.**

அ) நாமகரண கூட்ட பிரிவுகளோ அமைப்புகளோ இதில் கிடையாது.

ஆ) சற்று யோசித்துப்பாருங்கள், பேதுரு ஒரு கத்தோலிக்கர், பவுல் ஒரு மெதடிஸ்ட், யோவான் ஒரு பிரஸ்படீரியன், யாக்கோபு ஒரு பாப்டிஸ்ட், மாற்கு ஒரு லூத்தரன், பிலிப் ஒரு பெந்தெகொஸ்து இப்படியா...?

இ) "கிறிஸ்துவின் சபையார்" என்று தனிப்பட்ட சபையைக் குறித்தாலும் எல்லா சபையாரையும் சேர்த்து சொல்லப்படுகிறது தனித் தனி நாம கரணக் கூட்டத்தைப் பற்றியல்ல (ரோம.16:16).

ஈ) பிரிவினைகள் கண்டனம் செய்யப்படுகிறது (1கொரி.1:10-13).

உ) இயேசு ஒருமைப்பாட்டிற்காக ஜெபித்தார் (யோவா.17:20,21).

ஊ) கள்ள போதகர்களுக்கு எச்சரிக்கை (ரோம.16:17,18; தீத்து3:10,11 2யோவான்9-11).

**9. இந்த புதிய ஏற்பாட்டு சபை, தெய்வீக ஒழுக்க கோட்பாட்டை கடைப்பிடிக்கிறது.**

அ) மாம்சத்தின் கிரியைகள், கண்டிக்கப்படுகிறது (கலா.5:19-21).

ஆ) ஒழுங்கற்று நடக்கிறவர்களை விட்டு விலக வேண்டுமென வலியுறுத்துகிறது (1கொரி.5;6:9-11; 2தெச.3:16).

இ) சபை அங்கத்தினர்கள், ஒருவரிலொருவர் அன்பு காட்டுவதிலிருந்து அவர்களை அறிந்து கொள்ளலாம் (அப்.2:44,45; 4:34-37; யோவா.13:34,35; 1யோவா.3:11; 16-18,23).

**10. புதிய ஏற்பாட்டு சபைக்கு பொதுவான ஒரு நம்பிக்கையுண்டு.**

அ) அவர்கள் குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது (பிலி.3:20,21).

ஆ) அங்கிருந்து ஆண்டவர் வர காத்திருக்கிறார்கள் (1தெச.5:1-11).

இ) இந்த பூமியில் "அவர்கள் அந்நியரும், பரதேசிகளுமா யிருக்கிறார்கள்" (1பேது.2:11).

ஈ) கடைசி நாளில் "ஜீவ கிரீடத்தைப்" பெற அவர்கள் காத்திருக்கிறார்கள் (2தீமோ.4:6-8).

உ) அவர்கள் புதிய வானங்களையும் புதிய பூமியையும் எதிர்பார்த்திருக்கிறார்கள் (1பேது.1:3-5; 2பேது.3:13).

**11. இந்த புதிய ஏற்பாட்டு சபையில் பிரவேசிக்க விசேஷித்த வழி உண்டு.**

அ) ஒருவன், சுவிசேஷத்தை கேள்விபடுதல் வேண்டும் (மாற்கு16:15; எபி.11:6; யோவா.6:44,45).

ஆ) ஒருவன், சுவிசேஷத்தை விசுவாசித்தல் வேண்டும் (1கொரி.15:1-4; ரோம.1:16; யோவா.8:24; மாற்.16:15,16).

இ) ஒருவன், அவன் பாவங்களைவிட்டு மனந்திரும்புதல் வேண்டும் (லூக்.24:47; அப்.2:38; அப்.3:19; அப்.17:30,31).

ஈ) ஒருவன், அவன் விசுவாசத்தை அறிக்கையிடுதல் வேண்டும் "இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன்" என்று அறிக்கை செய்தல் வேண்டும் (மத்.10:32,33; மத்.16:16; அப்.2:37; ரோம.10:9,10; 1தீமோ.6:12).

உ) ஒருவன், ஞானஸ்நானம் பண்ணப்படுதல் வேண்டும் (மாற்.16:16; 1கொரி.12:13).

a) இது தண்ணீரினுள் அடக்கம் பண்ணப்படுதல் (ரோம.6:4,5; கொலோ.2:12; அப்.8:36-38).

b) இது பாவமன்னிப்பை பெறுதல் (மத்.26:28; அப்.2:38).

c) இது பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் (மத்.28:19)

d) இது ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளாக்க "கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களுமுண்டு" (கலா.3:26,27; எபேசி.1:3)

e) இது நம்மை இரட்சிக்கிறது (1பேது3:21; அப்.22:16; வெளி.1:5; மாற்.16:16).

f) இது யாரெல்லாம் இதற்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறார்களோ அவர்களுக்கு மாத்திரமே (1யோவா.3;4; ரோம.3:23; அப்.8:12).

**12. புதிய ஏற்பாட்டு சபை அங்கத்தினர்கள், கிறிஸ்துவை தங்களுடைய பரிந்து பேசும் வக்கீலாக, பிரதான ஆசாரியராக, மத்தியஸ்தராக கொண்டிருக்கிறார்கள் (1யோவா.2:1,2; எபி.4:15; 1தீமோ.2:5)**

அ) அங்கத்தினர் தங்கள் பாவங்களை அறிக்கையிட வேண்டும் (1யோவா.1:6-10).

ஆ) அங்கத்தினர்கள் மனந்திரும்பி ஜெபித்தல் வேண்டும் (அப்.8:22).

முடிவுரை:

1. ஆரம்பத்தில் ஒரே ஒரு சபைதான் இருந்தது.

2. இரட்சிக்கப்பட்டவர்களே அதில் அங்கத்தினர்களாயிருப்பார்கள். இருந்தார்கள்.

3. இது "மாதிரியின்" படியாக கட்டப்பட்டுள்ளது.

4. நாம் கூட இதை இதன் மாதிரியின்படியாக கட்ட முடியும்.

## ஜெபியுங்கள்

- தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் அலுவலக பணிகளுக்காக...
- சென்ற மாதம் கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட செல்வகுமார் மற்றும் செல்வி தம்பதியருக்காக...
- மேட்டுப்பாளையம் கூட்டங்கள் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்பட்டதற்காக...
- கொடைக்கானலில் மே 18,19,20 தேதிகளில் நடைபெறவுள்ள பிரசங்கியார் குடும்ப ஐக்கிய கூட்டங்களுக்காக...
- வாரத்தின் எல்லா நாட்களிலும் இலங்கை ஆசிய சேவை 25 மற்றும் 41 அலைவரிசைகளில் மாலை 5.30 முதல் 5.45 வரை வெளிவரும் கிறிஸ்துவின் சபையார் வழங்கும் ரேடியோ நிகழ்ச்சிகளுக்காக...

## வேதஅறிவுப்போட்டி எண் 103-ன் விடைகள்

1. மோசே -யாத்.17:15
2. அப்பொல்லோ -அப்.18:26
3. சுகமாய் -லேவி.25:18
4. பவுல் -ரோ.7:24
5. மோசே -எண்.11:12
6. மரணத்தை -2கொ.7:10
7. அரிவாளை உபா.23:25
8. தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே -கலா.3:26
9. யோசுவா -யோசு.24:22
10. ஒரே சரீரமாக -எபே.2:16

## வேதஅறிவுப்போட்டி எண் 103-ல் வெற்றிபெற்றவர்கள்

1. V.கோவலன் - மதுரை
2. J.நிர்மலாஜான் - மதுரை
3. N.ஜான் செல்லையா - மதுரை
4. Sis.குளோரி - சென்னை
5. M.வேலு - கீழ்முருங்கை
6. G.பூங்கோதை - கோபி
7. R.பவுல் சாமுவேல்-பிடாரியூர்
8. R.அருண்குமார்- பிடாரியூர்
9. Mrs.ஜாஸ்மின் - மதுரை
10. S.பாக்கியராஜ் -திண்டுக்கல்
11. Mrs.மெல்ஸிடா - திண்டுக்கல்
12. R.கஸ்தூரி - தூத்துக்குடி
13. R.கிப்ஃட் ராஜா - தூத்துக்குடி
15. A.ஆனந்த் - நாகமலை
16. K.மோகன் - கொபாளை
17. J.ரூத்விக்டோரியா- சிலுவத்தூர்
18. M.ராமச்சந்திரன் - தூத்துக்குடி
19. Mrs.கிரோனாப்விக்டர்-வதிலை
20. P.மரியாள் -செபாளையம்
21. D.அந்திரேயன் -செபாளையம்
22. Mrs.மெர்ஸிடக்லஸ்- கோவை
23. P.பாலாஜி -செபாளையம்
24. R.சிவராஜ் -செபாளையம்
25. S.இந்திராணி -செபாளையம்
26. S.மைதிலி -செபாளையம்
27. J.ஜாய் வாசுகி -செபாளையம்
28. N.ஜூலியட் நித்தியானந்தம்- மதுரை
29. Mrs.ஏலியாம்மா -கடலூர்
30. S.ஜீவிதா -செபாளையம்
31. Bro.ஷர்லோ -புதுச்சேரி
32. S.கண்ணியம்மாள் - செபாளையம்
33. G.P.ஏசையன்ராஜ் -கோபி
34. N.கமலவேணி - சென்னை


## மார்ச் மாத ஊழியங்கள் - Ministries of March, 2009




மார்ச் 12-ம் தேதி காலை ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்ட அரியலூர் மாவட்டம் வெளிச்சங்குடி சபையார்.



மார்ச் 12-ம் தேதி மாலை ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்ட விழுப்புரம் மாவட்டம் சத்தியமங்களம் சபையார்.



மார்ச் 27-ம் தேதி வெள்ளிக்கிழமை கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற ஊழியர்களுக்கான கருத்தரங்கில் சபைக்கான உபகரணங்கள் ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகிறது.



மார்ச் 27-ம் தேதி வெள்ளிக்கிழமை கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற ஊழியர் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஊழியர்கள்

மார்ச் மாதம் வெளிவந்த பத்திரிகை அழைப்பை ஏற்று கோவை, நாமக்கல், கரூர், திருப்பூர், ஈரோடு, சேலம், திருநெல்வேலி, திருவள்ளுர் மற்றும் இலங்கை பகுதிகளை சேர்ந்த ஊழியர்கள் கலந்து கொண்டு ஊழியர் கருத்தரங்கை சிறப்பித்தனர்.

# பிரதான கட்டளை எது?
# What Is The Greatest Commandment?

*- Loy Mitchell, TVOTI*

1. **தேவனிடத்தில் உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடு அன்புகூருவதே பிரதான கற்பனையாயிருக்கிறது!** நியாயப்பிரமாணத்தில் தேறினவர்களில் ஒருவன் இந்த வினாவினால் அவரை சோதித்தான்: 'போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது?' இயேசு பதிலளித்தார்: 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை' (மத்.22:35-38).

a) இப்படிப்பட்ட பதிலை பரிசேயர்கள் எதிர்பார்த்தார்களோ என நான் சந்தேகிக்கிறேன்.

b) ஒருவேளை அவர்கள், "கொலை செய்யாதே" அல்லது "ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக" போன்ற கற்பனைகளை அவர் சொல்லுவார் என நினைத்திருக்கலாம்.

c) ஒருவேளை அவர்கள், "நற்கிரியைகளைச் செய்" அல்லது "விபசாரம் செய்யாதிருப்பாயாக" அல்லது "தேவனைத் தொழுதுகொள் என்று அவர்சொல்லுவார் என நினைத்திருக்கலாம்.

d) இயேசு தம்முடைய அழகான பதிலில் மிக ஆழமான கருத்தினை வெளிப்படுத்தினார்.

e) அவருடைய பதில் முதல் நூற்றாண்டு ஜனங்களுக்கு மிகச் சிறப்பானதாயிருந்தது அத்தோடு இன்று நமக்கு அது சிறப்புடையதாகவே இருக்கிறது.

f) பிரதானக் கற்பனை **தேவனிடத்தில் அன்புகூருவதே!**

2. **மனிதன் தேவனிடத்தில் எவ்வாறு அன்புகூருகிறான் என்பதை வெளிப்படுத்தவேண்டும்.**

a) இது மனிதனைப் பிரியப்படுத்தும்படி செய்கின்ற செயலல்ல (மத்.7:1-8).

b) **இது நாம் தேவனிடத்தில் எவ்வளவு அன்புகூருகிறோம் என பேச்சிலே மட்டும் காட்டுகிற செயலல்ல.**

c) **மனுஷன் தன்னுடைய அன்பினை தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதின்மூலம் காண்பிக்கிறான்.**

அ) இயேசு யோவான் 14:15-ல் சொன்னார்: "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்"

ஆ) தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறவன் அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறான். "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோவா.15:10).

இ) தேவனுடைய கற்பனைகளை நீங்களும் நானும் கைக்கொள்ளாவிட்டால், நாம் அவரது கற்பனைகளை அறியவுமில்லை அல்லது நாம் அவரிடத்தில் அன்புகூரவில்லை என்பதைக் காட்டுகிறோம்.

3. **இன்று அநேகர் புறக்கணிக்கின்ற சில கற்பனைகளை பாருங்கள்.**

a) குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசம் கொள்ளுங்கள். "நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது" (1யோவா. 3:23).

b) எல்லாருடைய பாவங்களுக்காக மனந்திரும்பவேண்டும் "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல் லாருக்கும் கட்டளையிடுகிறார்" (அப்.17:30).

c) இரட்சிப்பிற்காக ஞானஸ்நானம் பெறவேண்டும். "விசுவாசமுள்ள வனாகிய ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்.16:16).

d) விசுவாசத்தில் நிலைத்திருந்து அவருடைய சித்தம் செய்தல் வேண்டும். தயவு செய்து 1கொரிந்தியர்15:58யும் வெளிப்படுத்தின விசேஷம் 2:10யும் வாசியுங்கள்.

4. **இரண்டாவது மிக முக்கியமான கற்பனை பற்றியும் இயேசு நமக்குச் சொல்லுகிறார்.**

"இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே" (மத்.22:39,40).

a) ஆம், நீங்களும் நானும் நம்மிடத்தில் நாம் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும்.

b) இதை நாம் செய்ய தவறும்போது, நாம் தேவனையும் எல்லாருக்குமான அவருடைய சித்தத்தையும் அற்பமாக எண்ணுகிறோம் எனக்காட்டுகிறோம்.

a) நம்மோடுள்ள மனிதரிடத்தில் ஏற்றசமயத்தில் அவர்களுடைய தேவையை பூர்த்திசெய்வதின்மூலம் நம்முடைய அன்பை நாம் வெளிப்படுத்துகிறோம். "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மை யினாலும் அன்புகூரக்கடவோம்" (1யோவா.3:16-18).

5. **தங்கள் சகோதரனிடத்தில் அன்புகூர தவறுகிறவன் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான்.**

"நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவை களுமாயிருந்ததினிமித்தந்தானே. என் சகோதரரே உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள். நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்" (1யோவா.3:11-14).

**முடிவுரை:** நீங்கள் தேவனிடத்தில் அன்புகூருகிறீர்களா? அப்படியானால் இன்றே அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியுங்கள். இதுவே முதலாவது மிகமுக்கியமானதுமான கற்பனை ஆகும்.

**நடப்புச் செய்திகள்**

✣ *தமிழகத்தில் டிசம்பர் மாதத்திற்குள் கூடுதலாக 2,300 செல்போன் கோபுரங்கள் அமைக்கப்படும் என பிஎஸ்என்எல் தலைமை பொது மேலாளர் வரதராஜன் கூறியுள்ளார்.*

✣ *நாடு முழுவதும் புது பென்ஷன் திட்டம் மே 1-ம் தேதிமுதல் அமைகிறது. இத்திட்டத்தில் அரசு ஊழியர்களுடன், சாதாரண கூலித்தொழிலாளரும் சேரலாம்.*

✣ *கொடைக்கானலில் கோடை விழா மே மாத இறுதியில் துவங்க உள்ளது.*

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -17

## மாபெரும் பிரிவு - *Great Division*

### ஓய்வு நாள் - *Holiday;* பரிசுத்த நாள் - *Holy Day*

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378

*—சென்ற மாததொடர்ச்சி*

அநேகமான ரோமர்கள், மற்றும் ரோம அரசர்கள், அதிகாரிகள் கிறிஸ்தவர்களுக்கு பல துன்பங்கள் கொடுத்திருந்தாலும் ஆங்காங்கே பாலைவன சோலையைப் போன்று ஒரு சிலர் நன்மை செய்ததை சரித்திரம் மறக்காது, நாமும் மறக்க வேண்டாம்.

யூதர்கள் மட்டுமே கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டனர் என்பதை (அப்.1முதல்9 அதிகாரம் வரை) அறியலாம். முதன் முதலில் இரட்சிக்கப்பட்ட இத்தாலிபட்டாளத்தின் நூற்றுக்கு அதிபதி கொர்நேலியு இலத்தின்பெயர் (எக்காள தொனி) என்பவர் தேவபக்தியுள்ளவரும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்து, ஜெபிக்கும் மனிதர் (அப்.10:1,2) (CORNELIUS SULLA) **கொர்நேலியு சுல்லா** என்பவர் 10,000 அடிமைகளை விடுதலையாக்கினதினால், விடுதலையாக்கப் பட்டவர்களும், மற்றவர்களும் இப்பெயரை சூட்டி மகிழ்ந்தனர். உலகெங்குமுள்ள யூதர் அல்லாத (நம்மைப்போன்ற) அனைவருக்கும் முன்னோடியாக திகழ்ந்த இவர்தான் முதன் முதலில் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த புறஜாதியார். லூக்கா 7:2-10-ல் இயேசு தாம் செய்த அற்புதத்தினாலும், அடையாளத்தினாலும் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியவரை ஆச்சரியப்படுத்தியதற்கு இவனின் நற்கிரியை மாபெரும் விசுவாசமேயாகும் வசனம் -9 (இச்சம்பவம் மட்டுமே **இயேசுவை ஆச்சரியப்படுத்தியது**).

ரோமானிய பேரரசர் அகஸ்டஸ் சீசர் (கி.மு.27 முதல் கி.பி 14 வரை) (இவரின் பெயரினை நினைவுபடுத்தவே "ஆகஸ்டு மாதம்" பெயரிடப்பட்டது) ரோமுலஸ் அகஸ்டுலஸ் (கி.பி.476) வரைக்கும் சுமார் 500 ஆண்டுகளாக 81பேர் ஆண்டனர். 5வது ரோம அரசனாக நீரோ 54-முதல் 68 வரைக்கும் ஆண்டான். கிறிஸ்தவர்களுக்கு தீமைசெய்வதே இவனின் பொழுதுபோக்கு, இக் கொடியனை பின்பற்றி தொடர்ந்து பல அரசர்கள் கிறிஸ்தவர்களுக்கு நன்மையல்ல தீமையே செய்தனர். தீமைசெய்தவர்களிடையே நன்மைசெய்யும் நற்கேணியாக கிறிஸ்தவ உலகின் நன்கொடையாக 27.2.280 தோன்றி 22.5.337-ல் மறைந்த ரோம பேரரசனும், முதலாம் ரோம அரசனுமாக (CONSTANTINE) **கான்ஸ்டான்டின்** ஆவர். இவர் நற்செய்தியை கேட்டு, விசுவாசித்து இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதுடன் குடிமக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களாக மாற வழிவகை செய்தார். இவர் ரோம் நகருக்கு வெளியே **மில்வியன் பாலம்** (Million Bridge)நடந்த கடும் போரில் (313-ல் வென்றது இவரை பேரரசராக்கியது. கிறிஸ்துவர்களை சகிப்புதன்மையுடனும் கண்ணியமாக

நடத்தவேண்டுமென மிலான் உத்தரவை பிறப்பித்தார். தேவாலயங்கள் கட்ட நிலங்கள் அளித்ததோடு திருச்சபைகளுக்கு தனி உரிமை, சலுகைகள் வழங்கினார். (Donatism) டொனாட்டிஸம் என்ற சபைபிரிவு 4-ம் நூற்றாண்டில் ஆப்பிரிக்காவில் 'டொனடஸ்' என்பவரால் கிறிஸ்தவத்திலிருந்து பிரிந்த இவ்வியக்கம் கிறிஸ்தவர்களுக்கு தீங்கிழைக்க ரோம அரசுக்கு பேராதரவு அளித்தது. இவர்கள் 312 ரோமானியத்திருச்சபையிலிருந்து பிரிந்து சென்றனர். இஸ்லாம் 7-ம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தை மேற்கொள்ளும் வரையில் டொனாடிஸம் ஆப்பிரிக்காவில் தழைத்திருந்தது. கிறிஸ்துவர்களுக்கு தொல்லை கொடுத்த இவ்வியக்கத்தை கான்ஸ்டான்டின் எதிர்த்தார். 325-ல் முக்கியத்துவம் வாய்ந்த நீசியா கவுன்சிலில் சனிக்கிழமை ஓய்வு நாள் ஆராதனையாக (Holi Day) இருந்ததை மாற்றி ஞாயிற்றுக் கிழமையை (HOLY DAY) பரிசுத்த நாளாக உலக மக்கள் இரட்சகரை தொழ வழிவகை செய்தார். இன்னும் உலகமெங்கும் (அரேபியர்கள் தவிர) உள்ளவர்கள் இரட்சகர் உயிர்த்தெழுந்த, முதல் நற்செய்தி அறிவிக்கப்பட்ட "கிறிஸ்துவின் சபை" உண்டாக்கப்பட்ட நாளாகிய கர்த்தருடைய நாளின் (வெளி.1:10) படி அவரை தொழுது கொண்டு கிறிஸ்தவம் உலகளாவிய மார்க்கமாக வளர்ச்சியுற வழிவகை செய்தார். 4-ம் நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதுமே கிறிஸ்துவை தொழுதுகொண்டது. வேறே மார்க்கத்திற்கு அங்கு இடமில்லை.

தலைநகர் ரோமிலிருந்து பைஸாண்டியம் நகருக்கு மாற்றி ஐரோப்பா, ஆசியா இணையும் இந்நகருக்கு "கான்ஸ்டாண்டி நோபிள் என்ற தனது பெயரால் பெயரிட்டார். (உண்மையிலேயே அவர் ஓர் சிறப்புடைய உயர்குணமுள்ளவர்தான்). இவருக்கு பிறகு வந்த அரசர்கள் வலிமையற்றவர்களாகவும், கிறிஸ்தவத்தின் மீது அக்கரையற்றவர்களாக ஆட்சி புரிந்ததாலும் சபைகளில் வீடுகளில் விசுவாசிகளிடமிருந்து வேதாகமம் விலக்கப்பட்டதாலும் (600 முதல் 31.10.1517 வரை சுமார் 900 ஆண்டுகளுக்கு மேலாக) சத்தியத்தின் சாரமற்றவர்கள் விசுவாச வாழ்வு நடத்த வழி காட்டிகள் இல்லாததாலும் இஸ்லாமியர்கள் கையோங்கியதாலும், ஆண்கள் கொலை செய்யப்பட்டதாலும், மனைவி பிள்ளைகள் வலுக்கட்டாயமாக மதம், பெயர் மாற்றப்பட்டது. கான்ஸ்டாண்டி நோபிள் நினைவாக இருந்த அந்நகரத்திற்கு இன்று "இஸ்தாம்புல்" என வழக்கப்பட்டுவருகிறது. திருச்சபைகள் இருந்த இடத்தில், கட்டிடக் கலை பொக்கிஷமான ஹேகியா சோப்பியா சுலைமான் (சாலொமோன்) மற்றும் நீலமசூதியை இன்றும் காணலாம். இதன் விளைவாக பெயர் மாற்றமும் ஏற்பட்டது, எப்படியெனில் சாலொமோன் சுலைமானாக, தாவீது - தாவூத்தாக, மரியாள் - மரியம்மாவாக, யோசேப்பு - யூசுப்பாக, யாக்கோபு - யாக்கூப்பாக ஆபிரகாம் - இப்ரஹிம்மாக, ஏவாள் - அவ்வாவாக, யோனா - யூனூஸ்சாக, ஆரோன் - ஹாரூன்னாக, இயேசு - ஈசாவாக, மோசே - மூசாவாகவும் இஸ்ரயேல் - இஸ்மாயில் ஆகவும் மாற்றி மகிழ்ந்து வருகிறார்கள். இவைகள் போதாது என்று கருதி இந்திய மக்களுக்கு எண்ணற்ற நற்தொண்டுகள் நாளும் செய்தவர்களின் கிறிஸ்தவ பெயர்களை மாற்றி வேறு காரணமில்லாத பெயரிட்டு வருவதை நாம் யாரும் கண்டு கொள்ளாதது தூங்கிக் கொண்டிருப்பது நம்முடைய அறியாமை அல்லவா?

முதலாம் கான்ஸ்டான்டைன் நோபிள் (CANSTANTINOPLE)

அன்கிரோனா, நிக்கோமிடியா அருகில் 22.5.337-ல் மரணமடைந்த கிறிஸ்தவரான முதல் ரோமானிய பேரரசர். கிறிஸ்தவத்துக்கும், கிறிஸ்தவர்களுக்கும் நன்மையைக் காட்டிலும் பேரளவு தீமையே வெகுவாக விளைவிக்கும்படியாக வேதாகமத்தில் குறிப்பிடாத, அப்போஸ்தலர்கள் கடைபிடிக்காத (அவருக்கே தெரியாத புரிந்துகொள்ளாத) ஆராதனை முறைகளை பாமர மனிதர்கள் விரும்பும் படியாய் புதிய வழக்கமும், பழக்கமும் ஐரோப்பா மட்டுமின்றி உலகெங்கும் வளர்ந்து வரும் கிறிஸ்தவத்திற்கு பெரும் தீமையை விளைவித்தது. இந்நிலையில் **ரோமன் கத்தோலிக்க சபை** உண்டானது. இந்தக் கல்லின் மேல் **என் சபையைக்** (கிறிஸ்துவின் சபையை) கட்டுவேன் பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்.16:18) போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது (1கொரி.3:11 ) வேதவாக்கியத்திற்கு எதிராக ரோமன் கத்தோலிக்க சபை வெகு ஆடம்பரமாய் இயங்க தொடங்கியது. இதனால் முதலாவதாக வேதாகமம் விசுவாசிகளிடமிருந்து எடுக்கப்பட்டது, பரிக்கப்பட்டது. போதகர் மட்டுமே சில நாட்கள் (தினமும் அல்ல) மட்டுமே வேதாகமம் வாசிக்கப்பட்டது. மீறி வேதாகமத்தை படிப்போர் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். பாவமன்னிப்பளிக்கவும், சகல அதிகாரமும் தனக்கே உள்ளது என்றதோடு 2தெசலோ2:4 பவுலடியார் "அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, **ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிக்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும்**, தேவனுடைய ஆலயத்தில் **தேவன்போல்** உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்" என்ற வேதவாக்கியம் நிறைவேறியது. இவ்வாறு "ரோமன் கத்தோலிக்க" மார்க்கம் "கிறிஸ்துவின் சபையை" வெகுவாக தாக்கியது. இதனால் பற்பல விக்கிரக ஆராதனைகள், தவறான பாரம்பரிய சடங்குகள் தடையின்றி சபைக்குள் வெகுவேகமாக புகுந்து சபையை சீர்குலைத்தது. அவர்களின் விருப்பம்போல் கர்த்தருடைய பந்தி, ஞானஸ்நானம் போன்றவைகள் வேதாகமத்தில் குறிப்பிடாத கோட்பாடுகளை உண்டாக்கி மகிழ்ந்து தவறான இவைகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகும். இவ்வளவில் நாம் இவைகளை புரிந்து கொண்டு எச்சரிக்கையாய் இருப்பதுடன், மற்ற தேவமக்களையும் எச்சரிக்கையாய் தேவனை ஆராதிக்க நல்லாலோசனையை நாளும் கூறிடுவோமா?

அன்றியும் கிறிஸ்துவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற (நாம்) யாவரும் துன்பப்படுவார்கள்" (மேலும்) பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாவுமிருந்து **மேன்மேலும்** கேடுள்ளவர்களாவார்கள்" 2தீமோத்தேயு3:12,13. 21- நூற்றாண்டிற்கு முன்பு கூறப்பட்ட இவ்வெச்சரிப்பை நன்கு ஆலோசனை செய்து செயல்பட நாம் இன்றே முயலுவோம். உலகமெங்கும் ஆதி சபையான இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் விலைக்கிரயமாய் வாங்கப்பட்ட சபையை வளர்த்திட வாழ்நாளும் முயன்றிடுவோம், வெற்றிபெறுவோம் விசுவாசத்தை காத்துக்கொள்வோம்.

குறிப்பு: இக்கட்டுரையைக் குறித்து தாங்கள் அபிப்பிராயத்தையும் ஐயங்களையும் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது எழுதுங்கள்.



# யாசோன்

சிறுவர் பகுதி

**வேதவாசிப்பு:**
**அப்போஸ்தலர்.17:1-10**

இந்த யாசோன் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? தெசலோனிக்கே பட்டணத்தில் உள்ள ஒரு விசுவாசி. பவுலும் சீலாவும் தெசலோனிக்கே பட்டணத்திற்குச் சென்று அங்கே யூதருடைய ஜெப ஆலயத்தில் பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் சென்று, மூன்று ஓய்வு நாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை கொண்டு அவர்களுடனே பேசிவந்தான்.

அது என்னவென்றால் கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் திருஷ்டாந்தப்படுத்தினான். அதைக்கேட்ட யூதர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள். இதிலே விசுவாசியாத யூதர்கள் வைராக்கியங்கொண்டு வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு கூட்டங்கூடி பட்டணத்தில் அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைந்து கொண்டு, அவர்களைப் பட்டணத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுவர வகைதேடினார்கள். அவர்களைக் காணாமல், யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டுவந்து; உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். இவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான் இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டு இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலங்கப்பண்ணினார்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள்.

பின்பு அவர்கள் யாசோனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக்கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள். உடனே சகோதரர் இராத்திரிகாலத்திலே பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்.

யூதர்கள் மத்தியிலும், கிரேக்கர் மத்தியிலும், தெசலோனிக்கே பட்டணத்திலே சுவிசேஷம் அறிவிக்க உதவியாக இருந்த யாசோனைப் பற்றி கேள்விப்பட்டீர்கள் அதைப்போல நீங்களும் வருங்காலத்தில் சுவிசேஷம் அறிவிக்க உதவியாக இருப்பீர்களா?

**மனப்பாட வசனம்:**
"சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்"
(அப்.8:4)

# வேத அறிவுப் போட்டி
# எண். 104

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் ஒவ்வொரு மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. கீலேயாத்தியனான யெப்தா எப்படிப்பட்டவனாயிருந்தான்?
2. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு என்ற அப்போஸ்தலன் யார்?
3. உன் முந்தின நற்குணத்தைப்பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது என்ற சுதந்தரவாளி யார்?
4. ஒருவருக்கொருவர் என்ன சொல்லாதிருங்கள் என்று பவுல் எழுதுகிறார்?
5. மனுஷனுக்கு விரோதமாக மனுஷன் பாவஞ்செய்தால், அதை எவர்கள் தீர்ப்பார்கள்?
6. எந்த நிருபம் பரிசுத்தமான சகோதரர் யாவருக்கும் வாசிக்கப்படும்படிசெய்யவேண்டுமென்று கர்த்தர்பேரில் ஆணையிட்டு எழுதப்பட்டது?
7. நாங்கள் எங்கள் குமாரத்திகளைத் தேசத்தின் ஜனங்களுக்குக் கொடாமலும், எங்கள் குமாரருக்கு அவர்கள் குமாரத்திகளைக் கொள்ளாமலும் இருப்போம் என்று யாருடைய நாட்களில் ஆணையிட்டுப் பிரமாணம்பண்ணினார்கள்?
8. நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்று பவுல் யாருக்கு எழுதுகிறார்?
9. என் வீட்டு ஜனங்களும், என்வேலைக்காரிகளும், என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள்; அவர்கள் பா இருதிறத்தாரையும் எப்படி தேவனுக்கு ஒப்புரவாக்கினார்?
10. தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி கிறிஸ்துவானவர் இரண்டாந்தரம் எப்படி தரிசனமாவார்?

"நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" கலா.3:29

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi Press14/13/24 melamanthai street, Batlagundu - 624 202.
Editor: B.Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Apr.2009.

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in

ஆராதனை நேரம் ஞாயிறு காலை 8.30 மணி
தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள
யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்

உங்கள் வானொலியில்
இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு
புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள் மேலும்

உங்கள் தொலைக்காட்சியில்
TAMILAN TV - Every Monday 6.00 - 6.15 a.m
IMAYAM TV - Every Tuesday 6.30 - 6.45 a.m
IMAYAM TV - Every Thursday 6.15 - 6.30 a.m

மாத இதழ் மற்றும் வேதபாடம்
தேவைக்கு உடனே ரூ.15/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

டிவி மற்றும் ரேடியோவில் வெளி வந்த
தேவ செய்திகள் அடங்கிய சிடி மற்றும்
டிவிடிக்கள் தேவைப்படுவோர் ரூ.100/-

அனைத்து
தொடர்புக்கும்

Monthly Magazine

To

*If undelivered please return to:*
From

Editor
THE WORD OF CHRIST
P.O.Box-5
Batlagundu - 624 202
S.INDIA.